


**27. 11. 2025**

தலைப்புச் செய்திகள்

1. தேச வளர்ச்சியின் தூண்களாக பாதுகாப்பு படைகள் திகழ்கின்றன என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. தனியார் துறையின் படைப்பாற்றல் திறன்களுக்கு, விண்வெளித்துறை வாய்ப்புகளை தோற்றுவித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. தென்மேற்கு வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் விரைவில் புயலாக உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

4. தமிழ்நாட்டில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

5. மலேஷியாவில் நடைபெறும் சுல்தான் அஸ்லான்ஷா கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது நியூசிலாந்தை எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

நாட்டின் பாதுகாப்பு படைகள் தேசப்பற்று மற்றும் தொழில் நேர்த்தியுடன் இறையாண்மையை முன்னெடுத்துச் செல்வதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய ராணுவத்தின் சாணக்கியா பேச்சுவார்த்தைகளை இன்று துவக்கி வைத்து உரையாற்றிய அவர், சவால்கள் நிறைந்த தருணங்களில் அளப்பறிய துணிச்சலுடனும், வீர தீரத்துடனும் ஆயுதப்படைகள் செயலாற்றுவதாக சுட்டிக்காட்டினார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலின் வெற்றியை எடுத்துரைத்த குடியரசு தலைவர், தீவிரவாதத்திற்கு எதிரான நம்நாட்டின் சிறப்பான நிலைப்பாட்டை இது பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

நம் நாட்டின் சிறந்த ராணுவத் திறனை மட்டுமல்லாமல், அமைதியை நிலைநாட்டுவதற்கான பொறுப்புமிகு செயல்பாட்டையும் உலகம் கண்ணோக்கியதாக அவர் எடுத்துரைத்தார்.

தேச வளர்ச்சியின் தூண்களாக பாதுகாப்பு படைகள் திகழ்கின்றன என்று கூறியஅவர், எல்லைப் பகுதிகளை வலுப்படுத்தி, கட்டமைப்பு, இணைப்பு, சுற்றுலா, கல்வி மேம்பாட்டையும் உறுதி செய்துள்ளதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியாவின் விண்வெளி பிரிவு உலகளாவிய முதலீட்டாளர்களை பெரிதும் ஈர்த்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் Sky Root ஸ்டார்ட்அப் தனியார் விண்வெளி நிறுவன வளாகத்தை புதுதில்லியிலிருந்து காணொலி மூலம் இன்று திறந்து வைத்து பேசிய பிரதமர், விண்வெளித் துறையில் வரலாற்று சீர்திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் விண்வெளித்துறை தனியார் நிறுவனத்தின் புதுமை கண்டுபிடிப்புகள், படைப்பாற்றல் திறனுக்கு திறக்கப்பட்டதாக கூறிய பிரதமர், இதன்மூலம் நாட்டின் அறிவியல் தொழில்நுட்பத் துறையுடன் ஸ்டார்ட்அப் மற்றும் தொழில் நிறுவனங்கள் இணைந்து செயலாற்ற வகைசெய்ய பட்டதாக கூறினார்.

வருங்காலங்களில் உலகளாவிய விண்வெளி பொருளாதாரம் பன்மடங்கு அதிகரித்து இளையோருக்கு எண்ணிலடங்கா புதிய வாய்ப்புகளை தோற்றுவிக்கும் என்று பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய விண்வெளித் துறையின் பாதை, புதிய உச்சங்களுக்கு சென்றுள்ளதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், நம்பகத்தன்மை, திறன் மேலாண்மை, மதிப்பீடுகள் அடிப்படையில் சர்வதேச விண்வெளி வரைபடத்தில் இந்தியா தனித்துவ அடையாளத்துடன் திகழ்வதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக Sky Root-ன் முதல் தனியார் வர்த்தக நவீன சுற்றுப்பாதை ராக்கெட்டான விக்ரம்-1-ன் செயலாக்கத்தையும் பிரதமர் துவக்கி வைத்தார்.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி வரும் 29-ம் தேதி சட்டீஸ்கடில் 60-வது அனைத்து இந்திய காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத்சிங்

இந்தியா – இந்தோனேஷியா நாடுகளிடையே தொன்றுதொட்டே கலாச்சாரமும், நாகரீக பிணைப்புகளும் காணப்படுவதை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 3-வது இந்தியா இந்தோனேஷியா பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைகளின் போது இன்று உரையாற்றிய அவர், இருநாடுகளிடையே நிலவும் கடல்சார் வரலாற்று ஒத்துழைப்பையும் சுட்டிக்காட்டினார்.

பன்முகத்தன்மை, உள்ளடக்கம், பல சட்டங்கள் இருநாடுகளுக்கும் பொதுவாக இருப்பதாக கூறிய அமைச்சர், இன்றைய பேச்சுவார்த்தைகள் பாதுகாப்பு ஒத்துழைப்பின் இன்றியமையா அங்கமாக திகழ்கிறது என்றார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது பிராந்திய பாதுகாப்பு, சர்வதேச பன்முக பிரச்சனைகள் ஒத்துழைப்பிற்கான

வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

இந்தோனேஷிய பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ஷாஃப்ரி ஷம்சுதீன் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றதோடு, இந்தியா - இந்தோனேஷியா இடையிலான நட்புறவை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு வங்க கடல் மற்றும் இலங்கையை ஒட்டிய கடற்பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது சென்னைக்கு 730 கிலோ மீட்டர் மற்றும் புதுச்சேரிக்கு 640 கிலோ மீட்டர் தொலைவில் தெற்கு, தென்கிழக்கே மையம் கொண்டுள்ளது.

இது வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கையை ஒட்டிய கடற்பகுதியில் விரைவில் புயலாக தீவிரமடையும் என்றும்,

அடுத்த 48 மணிநேரத்தில் இது வடதமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

தூத்துக்குடி, பாம்பன் துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும்,

நாகை, எண்ணூர் உள்ளிட்ட துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

புயல் எச்சரிக்கையை அடுத்து தூத்துக்குடியில் விசைப்படகு, நாட்டுப்படகு மீனவர்கள் இன்றும் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் ஆலோசனை

தமிழ்நாட்டில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. K.K.S.S.R. ராமச்சந்திரன், தலைமை செயலாளர் திரு. முருகானந்தம் உள்ளிட்ட அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

மாநில சமூக நலன் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடப்பாண்டிற்கான குழந்தைகள் நலன் சேவை விருதுகளை முதலமைச்சர் சென்னையில் இன்று வழங்கினார்.

இந்துசமய அறநிலையத்துறை, பிறப்படுத்தப்பட்டோர், மிகவும் பிறப்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறைகளின் சார்பில் 136 கோடி ரூபாய் மதிப்பில்

முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

18 திருக்கோவில்களில் 24 புதிய பணிகள் இதில் அடங்கும்.

தொடர்ந்து கருணை அடிப்படையில் 50 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

செங்கோட்டையன்

அஇஅதிமுக-வின் முன்னாள் அமைச்சர் திரு. K. A. செங்கோட்டையன் தமிழக வெற்றி கழகம் கட்சியில் இன்று இணைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து திரு. செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2021-ம் ஆண்டு கோபிசெட்டிப் பாளையம் சட்டப் பேரவை தொகுதியிலிருந்து அஇஅதிமுக உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் அக்கட்சியின் அனைத்து பொறுப்புகளிலும் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியை நேற்று ராஜினாமா செய்த திரு. செங்கோட்டையன் இன்று தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை வாய்ஸ்

சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்படிவங்களை பொதுமக்கள் பூர்த்தி செய்து வரும் 30-ம் தேதிக்குள் ஒப்படைக்குமாறு ஆட்சித் தலைவர் திருமதி பொற்கொடி கேட்டுக் கொண்டுள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய ஆயுஷ் குழுமத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் உள்ள காலி பணியிடங்களுக்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தகுதியுடையவர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் தலைமையில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

தென்காசி

குற்றாலம் பிரதான அருவியில் நீர்வரத்து சீரானதால் சுற்றுலா பயணிகளுக்கு இன்று அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக எமது தென்காசி செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

மலேஷியாவில் நடைபெறும் சுல்தான் அஸ்லான்ஷா கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது நியூசிலாந்தை எதிர்கொண்டுள்ளது.

புள்ளிகள் பட்டியலில் இந்தியா தற்போது 3-ம் இடத்திலும், நியூசிலாந்து 2-ம் இடத்திலும் உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖